# திருச்செங்கோடு நகராட்சி

## 30.03.2022 சாதாரண நகர் மன்ற கூட்ட நடவடிக்கைகளின் உண்மை நகல்கள்

**பொருள் எண்.1**

நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் மார்ச் 2022 –ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

பதிவு செய்யலாம்.

**(கோப்பு.எண்.2059/2022/சி1)**

**நகர் மன்ற தீர்மானம் எண்.53 , நாள்.30.03.2022.**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.2**

அரசாணை எண்.71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.13.09.2021–இன்படி, நமக்கு நாமே திட்டம் 2021–22 (NNT)–இன் கீழ் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.27519–8/2021/P2, நாள்.13.01.2022–ல், ரூ.9.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி 08.02.2022 அன்று நடைப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை உள்ளாட்சி தேர்தல் 2022 நடத்தை விதிமுறைகள் காரணமாக 24.02.2022 அன்று திறக்கப்பட்டு, அதன்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :-

| வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளியின் படி கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11, கூட்டப்பள்ளி பிருந்தாவன் நகர் முதல் குறுக்குத் தெரு பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | ரூ. 9.00 இலட்சம் | 1. Thiru.P. Sivaperuamal, Selam.<br>2. MSR & Co, Selam. | (-)0.01 % குறைவு<br>(+) 0.95 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள Thiru.P.Sivaperuamal, Selam அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலையான மதிப்பீட்டை விட (-)0.01 % குறைவு கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–)0.01% குறைவாக கொடுத்துள்ள Thiru.P. Sivaperuamal, Selam அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மேற்கண்ட பணியின் செலவினத்தை நமக்கு நாமே திட்டம் 2021–22 (NNT)-ன் கீழ் பொதுமக்கள் பங்களிப்பு தொகை (மூன்றில் ஒரு பங்கு) மற்றும் திட்ட நிதிலிருந்தும் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 8624/2021/இ1–1)**

**நகர் மன்ற தீர்மானம் எண்.54 , நாள்.30.03.2022.**

மதிப்பீட்டை விட (–)0.01% குறைவாக கொடுத்துள்ள Thiru.P. Sivaperuamal, Selam அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்ளப்பட்டு அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.3**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.27000/2021/WB, நாள்.04.03.2022–ன்படி தமிழகத்தில் உள்ள அனைத்து நகராட்சிகளிலும் மின் கட்டண சுமையினை குறைக்கும் வகையில் ஏற்கனவே உள்ள தெருவிளக்குகளை LED தெருவிளக்குகளாக மாற்றம் செய்ய மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு Tufidco Revoling fund –ன் கீழ் முன்மொழிவுகள் அனுப்ப தெரிவிக்கப்பட்டது. அதன்படி திருச்செங்கோடு நகராட்சியில் உள்ள மொத்த தெருவிளக்குகள் 5198–ல் ஏற்கனவே உள்ள LED விளக்குகள் 1476 போக மீதமுள்ள 3656 விளக்குகளைLED விளக்குகளாக மாற்றம் செய்யும் பணிக்கு ரூ.471.55 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கக்கோரி முன்மொழிவுகள் அனுப்ப மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 1473/2022/இ1**

**நகர் மன்ற தீர்மானம் எண்.55 , நாள்.30.03.2022.**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31114/2021/AMRUT 2, நாள்.05.01.2022–ன்படி கீழ்கண்ட பணியை 15வது மத்திய நிதி ஆணையம் (15th CFC) திட்டம் 2021–22 (Untied Grant)-இன் கீழ் மேற்கொள்ள ஏற்கப்பட்டு, நகர்மன்ற தீர்மான எண்.2 நாள்.05.01.2022–ல் ரூ.20.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதன்படி 11.03.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :-

| வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளியின் படி கொடுத்துள்ள விலை விகிதம் ரூ |
|---|---|---|---|
| Providing Compound Wall RCC structure up to plinth beam above ground level fencing up to 6 feet height – 215 RM, all-round paver block footpath 1.5 Meter Width, greennaries and plantation, children's play field at Koollapatti D Type Park in Ward no.30. | ரூ.20.00 இலட்சம் | 1.Thiru.N.Sivakumar, Tiruchengode<br>2.Thiru.M.Boopathy, Tiruchengode | மதிப்பீட்டை விட (-)0.13% குறைவு<br>மதிப்பீட்டை விட (+)0.02% அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–)0.13% குறைவாக கொடுத்துள்ள Thiru.N.Sivakumar, Tiruchengode அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 15வது மத்திய நிதிக்குழு (Untied Grant) 2021–2022 நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 7066/2021/இ1–15**

**நகர் மன்ற தீர்மானம் எண்.56 , நாள்.30.03.2022.**

மதிப்பீட்டை விட (–)0.13% குறைவாக கொடுத்துள்ள Thiru.N.Sivakumar, Tiruchengode அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31114/2021/AMRUT 2, நாள்.05.01.2022–ன்படி கீழ்கண்ட பணியை 15வது மத்திய நிதி ஆணையம் (15th CFC) திட்டம் 2021–22 (Untied Grant)-இன் கீழ் மேற்கொள்ள ஏற்கப்பட்டு, நகர்மன்ற தீர்மான எண்.2 நாள்.05.01.2022–ல் ரூ.20.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதன்படி 11.03.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :-

| வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளியின் படி கொடுத்துள்ள விலை விகிதம் ரூ |
|---|---|---|---|
| Providing water supply, toilet maintenance children's play materials - 4 Nos, greennaries plantation, lighting arrangements 20 Nos and approach road at Koottapalli park in Ward no.13. | ரூ.23.00 இலட்சம் | 1.Thiru.N.Sivakumar, Tiruchengode<br>2.Thiru.M.Boopathy, Tiruchengode | மதிப்பீட்டை விட (-)0.08 % குறைவு<br>மதிப்பீட்டை விட (+)0.09 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–)0.08% குறைவாக கொடுத்துள்ள Thiru.N.Sivakumar, Tiruchengode அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 15வது மத்திய நிதிக்குழு (Untied Grant) 2021–2022 நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 7066/2021/இ1–16**

**நகர் மன்ற தீர்மானம் எண்.57 , நாள்.30.03.2022.**

மதிப்பீட்டை விட (–)0.08% குறைவாக கொடுத்துள்ள Thiru.N.Sivakumar, Tiruchengode அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31114/2021/AMRUT 2, நாள்.05.01.2022–ன்படி கீழ்கண்ட பணியை 15வது மத்திய நிதி ஆணையம் (15th CFC) திட்டம் 2021–22 (Untied Grant)-இன் கீழ் மேற்கொள்ள ஏற்கப்பட்டு, நகர்மன்ற தீர்மான எண்.2 நாள்.05.01.2022–ல் ரூ.20.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதன்படி 11.03.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :-

| வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளியின் படி கொடுத்துள்ள விலை விகிதம் ரூ |
|---|---|---|---|
| Providing and planting of plants like Golden, Bamboo, Focus verities, Albania Verities, Buda Bamboo trees, Avenue trees etc – 2900 Nos Miawaki Forest at Antipalayam Booster Station. | ரூ.5.00 இலட்சம் | 1.Velan Construction, Tiruchengode<br>2.Thiru.K.Pulliappan, Malasamuthiram | மதிப்பீட்டை விட (-) 0.48% குறைவு<br>மதிப்பீட்டை விட (+)8.58 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–)0.48% குறைவாக கொடுத்துள்ள Velan Construction, Tiruchengode நிறுவத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 15வது மத்திய நிதிக்குழு (Untied Grant) 2021–2022 நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 7066/2021/இ1–17

நகர் மன்ற தீர்மானம் எண்.58 , நாள்.30.03.2022.

மதிப்பீட்டை விட (–)0.48% குறைவாக கொடுத்துள்ள Velan Construction, Tiruchengode நிறுவத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.7

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31114/2021/AMRUT 2, நாள்.05.01.2022–ன்படி கீழ்கண்ட பணியை 15வது மத்திய நிதி ஆணையம் (15th CFC) திட்டம் 2021–22 (Untied Grant)-இன் கீழ் மேற்கொள்ள ஏற்கப்பட்டு, நகர்மன்ற தீர்மான எண்.2 நாள்.05.01.2022–ல் ரூ.20.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதன்படி 11.03.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :-

| வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளியின் படி கொடுத்துள்ள விலை விகிதம் ரூ |
|---|---|---|---|
| Construction of Public Convenience (Urinal) – 8 Nos, Water Supply and lighting work Near Police Station. | ரூ.5.00 இலட்சம் | 1.Thiru.M.Boopathy, Tiruchengode | மதிப்பீட்டை விட (-) 0.15 % குறைவு |
| | | 2.Thiru.N.Sivakumar, Tiruchengode | மதிப்பீட்டை விட (-)0.02 % குறைவு |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–)0.15% குறைவாக கொடுத்துள்ள Thiru.M.Boopathy, Tiruchengode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 15வது மத்திய நிதிக்குழு (Untied Grant) 2021–2022 நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 7066/2021/இ1–18

நகர் மன்ற தீர்மானம் எண்.59 , நாள்.30.03.2022.

மதிப்பீட்டை விட (–)0.15% குறைவாக கொடுத்துள்ள Thiru.M.Boopathy, Tiruchengode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.8

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் நிறுத்தப்படும் வாகனத்திற்கு 01.04.2021 முதல் 31.03.2024 முடிய கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு எடுத்துள்ள திரு.ஏ.பாலு த/பெ அர்த்தனாரி என்பவர் தன்னால் தொடர்ந்து நடத்த இயலாததால் மேற்படி உரிமத்தை நகராட்சி வசம் ஒப்படைத்து விடுவதாக மனு செய்துள்ளார். எனவே மேற்படி இனத்தை மறு ஏலம் விடவும் அதனால் ஏதேனும் இழப்பு ஏற்படின் அதை மேற்படி மனுதாரர் செலுத்தியுள்ள வைப்புத்தொகையில் ஈடு செய்து கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:–

மன்றம் ஒப்புதலளிக்கலாம்.

(கோப்பு.எண்.9202/2020/அ3

**நகர் மன்ற தீர்மானம் எண்.60 , நாள்.30.03.2022.**

ஒப்புதலளிக்கப்பட்டது.

**பொருள் எண்.9**

திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் வைகாசி (2022) விசாக தேர்த்திருவிழாவை முன்னிட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலை ஓரங்களில் மற்றும் அரசு புறம்போக்கு இடங்கள் ஆகியவற்றில் தற்காலிக கடைகள் வைப்பவர்களிடமும், தேர்த்திருவிழா தொடங்கும் நாளில் இருந்து 15 நாட்கள் வரையிலும், நாலுகால் மண்டபத்திற்கு அருகில் உள்ள இடங்களில் வைக்கப்படும் கடைகளுக்கு ஆடிபதினெட்டு வரையிலும் கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு ஒப்பந்தப்புள்ளி/பொது ஏலம் மூலம் விடவும், அதற்காகும் செலவினத்திற்கும், மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு:–**

கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

அ) மேற்படி உரிமத்திற்கு வைப்புத்தொகை ரூ.1,00,000/– என நிர்ணயம் செய்யலாம்.

ஆ)அனுமதிக்கப்படும் இடங்களில் கேளிக்கைகள் நடத்த உரிமதாரர் சொந்த செலவில் அரசின் அனுமதி பெற்று கேளிக்கைகள் நடத்த வேண்டும் என்ற நிபந்தனையுடனும்.

இ)நகராட்சிக்குள் வந்து செல்லும் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யக் கூடாது என்ற நிபந்தனையுடனும், 2022–2023ம் ஆண்டுக்கு அனுமதிக்கப்பட்ட இனங்களான வாரச் சந்தை மற்றும் தினசரி நாளங்காடிகள் ஆகியவற்றில் கட்டணம் வசூல் செய்யக்கூடாது எனவும், மேலும் 2021–22 முதல் 2023–2024ம் ஆண்டுகளுக்கான பொது ஏலம் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் ஆகியவை இதற்கும் பொருந்தும் என்ற நிபந்தனையுடன் உரிமம் வழங்கலாம்.

**(கோப்பு.எண்.2086/2022/அ3**

**நகர் மன்ற தீர்மானம் எண்.61 , நாள்.30.03.2022.**

அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.10**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோவிட் – 19 தொற்று மற்றும் ஓமிக்ரான் தொற்று பரவலை தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் மேலும் நடைபெறவிருக்கும் நகர்புற உள்ளாட்சி தேர்தலுக்காக அமைக்கப்பட்டுள்ள 88 வாக்குச்சாவடி மையங்களிலும் கிருமி நாசினிகள் தெளித்து சுகாதார பணிகள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. பொது சுகாதாரப் பிரிவில் கிருமி நாசினிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களின் இருப்பு குறைவாக இருந்தது. இந்நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் பொதுசுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு –15ன் கீழ் 31.01.2022 அன்று ஆணையரின் அனுமதி பெற்று 02.02.2022 அன்று குறுகிய கால விலைப்புள்ளி கோரும் அறிவிப்பு வழங்கியதையும், அறிவிப்பின்படி 09.02.2022 வரை வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ள ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்பரேசன், நாமக்கல் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று விலைப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள விலைக்கு கீழ்காணும் பொருட்கள் கொள்முதல் செய்ய 09.02.2022 அன்று பணி உத்தரவு வழங்கியதையும் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு அதற்கான பில் பட்டியல் தொகை ரூ.5,62,670/–ல் பிடித்தங்கள் போக மீதி தொகை ரூ.5,32.670/–ஐ SDRF நிதியிலிருந்து ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்பரேசன், நாமக்கல் என்ற நிறுவனத்திற்கு தொகை வழங்கியதற்கும் மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

| வ.எண் | தேவைப்படும் பொருள் | அளவு | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | சுண்ணாம்புத்தூள் | 5 டன் | ரூ.45000 |
| 2. | பிளீச்சிங் பவுடர் | 3 டன் | ரூ.120000 |
| 3. | லைசால் | 1000 லிட்டர் | ரூ.198000 |
| 4. | முகக்கவசம் ( ஒரு முறை பயன்படுத்துவது ) | 5000 எண்ணம் | ரூ.20000 |
| 5. | பினாயில் | 200 லிட்டர் | ரூ.13000 |
| 6. | சோப்பு ஆயில் | 200 லிட்டர் | ரூ.28000 |
| 7. | ஹைப்போ குளோரைடு | 10000 லிட்டர் | ரூ.60000 |
| | | SGST + CGST | ரூ.78670 |

| | மொத்தம் | ரூ.562670 |
|---|---|---|

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி ஆணையாளரின் அனுமதி பெற்று தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 –ன் கீழ் கிருமி நாசினிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. இச்செலவினத்தை SDRF நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு.எண்.1010/2022/எச்1**

**நகர் மன்ற தீர்மானம் எண்.62 , நாள்.30.03.2022.**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.11**

திருச்செங்கோடு நகராட்சி பகுதிகளில் கோவிட் – 19 தொற்று மற்றும் ஓமிக்ரான் தொற்று பரவலை தடுக்கவும் தற்போது நடைபெறவிருக்கும் நகர்புற உள்ளாட்சி தேர்தலுக்காக அமைக்கப்பட்டுள்ள 88 வாக்குச்சாவடி மையங்களிலும் கிருமி நாசினிகள் தெளித்து சுகாதார பணிகள் மேற்கொள்ள வேண்டி இருந்தது. பொது சுகாதாரப் பிரிவில் கிருமி நாசினிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களின் இருப்பு குறைவாக இருந்தது. இந்நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் பொதுசுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் 03.02.2022 –ல் ஆணையரின் அனுமதி பெற்று 03.02.2022 அன்று குறுகிய கால விலைப்புள்ளி கோரும் அறிவிப்பு வழங்கியதையும், அறிவிப்பின்படி 10.02.2022 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான தொகை குறிப்பிட்டுள்ள பாகீரதி டிரேடர்ஸ், சேலம் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று விலைப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள விலைக்கு கீழ்காணும் பொருட்களை கொள்முதல் செய்ய 10.02.2022 –ல் பணி உத்தரவு வழங்கியதையும், பொருட்கள் கொள்முதல் செய்தமைக்கு வழங்கிய பில் பட்டியல் தொகை ரூ.8,89,750/– ல் பிடித்தங்கள் போக ரூ.8,45,261/– ஐ SDRF நிதியிலிருந்து பாகீரதி டிரேடர்ஸ், சேலம் என்ற நிறுவனத்திற்கு தொகை வழங்கியதற்கும் மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

| வ. எண் | தேவைப்படும் பொருள் | அளவு | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | முழு உடற்கவசம் Full Set | 1000 எண்ணம் | ரூ.273000 |
| 2. | முகக்கவசம் KN.95 | 5000 எண்ணம் | ரூ.115500 |
| 3. | சோப்பு ஆயில் ( Lemon Cross Flavoured) | 1000 லிட்டர் | ரூ.140000 |
| 4. | ஸ்பிரேயர் 12 லிட்டர் | 20 எண்ணம் | ரூ.70000 |
| 5. | கையுறை (ரப்பர் + துணி) | 1000 எண்ணம் | ரூ.120000 |
| 6. | லைசால் சென்டெட் | 500 லிட்டர் | ரூ.100000 |
| | | SGST + CGST | ரூ.76750 |
| | | மொத்தம் | ரூ.889750 |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி ஆணையாளரின் அனுமதி பெற்று தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 –ன் கீழ் கிருமி நாசினிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.

3. இச்செலவினத்தை SDRF நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு.எண்.1010/2022/ எச்1**
**நகர் மன்ற தீர்மானம் எண்.63 , நாள்.30.03.2022.**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.12**

திருச்செங்கோடு நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண். TN 34 K 8237 ஈப்பு வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள நான்கு டயர்களும் கொள்முதல் செய்த நாளிலிருந்து **52000** கிலோமீட்டர் இயக்கப்பட்டு தேய்மானம் அடைந்துள்ளது. மேற்படி வாகனத்திற்கு புதியதாக நான்கு டயர்கள் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளதால் முக்கியத்துவம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் நிறுவனமான திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் கூட்டுறவு மையம் லிமிடெட் SL (SPL) 170 வழங்கிய விலைப்புள்ளி தொகை ரூ.**33,540/—**ஐ ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. TN 34 K 8237 ஈப்பு வாகனத்திற்கு நான்கு டயர்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் நிறுவனமான திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் கூட்டுறவு மையம் லிமிடெட் SL (SPL) 170 வழங்கிய விலைப்புள்ளி தொகை ரூ.**33,540/—**ஐ ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியில் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு.எண்.1238/2022/ எச்2**
**நகர் மன்ற தீர்மானம் எண்.64 , நாள்.30.03.2022.**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.13**

திருச்செங்கோடு நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண். TN 34 T 0999 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்தும், இவ்வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள நான்கு டயர்களும் கொள்முதல் செய்த நாளிலிருந்து **40000** கிலோமீட்டர் இயக்கப்பட்டு தேய்மானம் அடைந்துள்ளதால் மேற்படி வாகனத்திற்கு புதியதாக நான்கு டயர்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு முக்கியத்துவம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் நிறுவனமான திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் கூட்டுறவு மையம் லிமிடெட் SL (SPL) 170 வழங்கிய விலைப்புள்ளி தொகை ரூ.**58,440/—**ஐ ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. TN 34 T 0999 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் சரிசெய்தும், நான்கு டயர்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் நிறுவனமான திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் கூட்டுறவு மையம் லிமிடெட் SL (SPL) 170 வழங்கிய விலைப்புள்ளி தொகை ரூ.**58,440/—**ஐ ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியில் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 1366 /2022/எச்2**
**நகர் மன்ற தீர்மானம் எண்.65 , நாள்.30.03.2022.**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.14**

திருச்செங்கோடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண். TN 28 T 8967 சுராஜ் மஸ்தாவிற்க்கு தகுதி சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து தகுதி சான்று புதுபிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.**1,16,000/—**க்கும் மேற்காணும் பணிகளை ஒப்பந்துபுள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. TN 28 T 8967 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் சரி செய்து தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3. செலவினத்தை பொது நிதியில் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 1433 /2022/எச்2**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.66 , நாள்.30.03.2022.</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.15**

திருச்செங்கோடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண். TN 34 D 1996 கழிவுநீர் ஊர்திக்கு தகுதி சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளதால் பொதுசுகாதார முக்கியத்துவம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15—ன் கீழ் 15.02.2022 அன்று ஆணையாளரின் அனுமதி பெற்று வாகனத்திற்கு செலுத்த வேண்டிய சாலைவரி மற்றும் பசுமை வரி தொகை ரூ.9979/—ஐ பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. TN 34 D 1996 கழிவுநீர் ஊர்திக்கு சாலைவரி மற்றும் பசுமை வரி செலுத்த வேண்டி பொதுசுகாதார முக்கியத்துவம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15—ன் கீழ் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியில் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**கோப்பு எண்.1273 /2022/எச்2**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.67 , நாள்.30.03.2022.</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.16**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடை எண்.63, சீத்தாராம்பாளையம் வணிக வளாக கடை எண்.01 மற்றும் 02—க்கு நீண்ட நாட்களாக வாடகை செலுத்தாததால் நகராட்சியினால் பூட்டி சீல் வைக்கப்பட்டது. எனவே மேற்படி கடையினை மறு ஏலம் விடவும் அதனால் ஏற்படும் இழப்பிற்கு அவர் செலுத்தியுள்ள வைப்பு தொகையால் ஈடுசெய்யவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:—</u>**

மன்றம் ஒப்புதலளிக்கலாம்.

**<u>கோப்பு.எண்.2098/2022/அ3</u>**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.68 , நாள்.30.03.2022.</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.17**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான சுமையுந்து நிலைய குடோன் எண்.02—யை மாத உரிமத்திற்கு எடுத்து நடத்தி வந்த திரு.எம்.ரவீந்திரன் த/பெ முத்துகிருஷ்ணன் எனபவர் தன்னால் தொடர்ந்து கடையினை நடத்த இயலாததால், மேற்படி கடையினை நகராட்சி வசம் ஒப்படைத்து விடுவதாக மனு செய்துள்ளார். எனவே மேற்படி கடையினை மறு ஏலம் விடவும் அதனால் ஏற்படும் இழப்பிற்கு அவர் செலுத்தியுள்ள வைப்பு தொகையால் ஈடுசெய்யவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:—</u>**

மன்றம் ஒப்புதலளிக்கலாம்.

**<u>கோப்பு.எண்.650/2022/அ3</u>**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.69 , நாள்.30.03.2022.</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.18**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி சேகரமாகும் குப்பைகளை புற ஆதார முறையில் 105 தூய்மை பணியாளர்களை கொண்டு ஒப்பந்ததாரர் திரு.K.குமார் என்பவர் மூலம் தூய்மை பணியில் ஈடுபடுத்த 01.01.2022 முதல் 31.03.2022 வரை மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த நீட்டிப்பு செய்து 29.12.2021 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தம் செய்து கொண்டமைக்கான கால அளவு 31.03.2022 வுடன் முடிவடைய உள்ளதாலும் புற ஆதார முறையில் புதிய நெறிகாட்டு வழிமுறைகளின்படி புதிதாக தேவைப்படும் பணியாளர்களுக்கு பிரேரரனை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே நிர்வாக அனுமதி வரப்பெற்று புதிதாக ஒப்பந்தபுள்ளி கோரி பணி உத்தரவு வழங்கி பணியாளர்களை பணியமர்த்தும் வரையில் நகர் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சேகரமாகும் குப்பைளை அப்புறப்படுத்தும் பணி தொய்வில்லாமல் நடைபெறவும் பொது சுகாதாரத்தின்

முக்கியத்துவம் கருதி தற்போது பணிபுரிந்து வரும் 105 தூய்மை பணியாளர்களை திரு.K.குமார் ஒப்பந்ததாரர் மூலம் தற்போது பெற்று வரும் நாளொன்றுக்கு நபரொன்றுக்கு ரூ.517.70/- என்ற ஊதிய விகிதத்தில் ஏற்கனவே வழங்கியுள்ள பணி உத்தரவில் காணும் நிபந்தனைகளுடன் இம்மூன்று மாத காலத்திற்குள்ளாக நிர்வாக அனுமதி வரப்பெற்று புதிய ஒப்பந்ததாரர் தேர்வு செய்யப்பட்டால் இந்த ஒப்பந்த நீட்டிப்பு எவ்வித அறிவிப்புமின்றி முடிவடையும் என்ற நிபந்தனைகளுக்கு உட்படுத்தி 01.04.2022 முதல் 30.06.2022 வரை மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்தத்தினை நீடிப்பு செய்து பணி உத்தரவு வழங்கவும் அதற்காகும் செலவினத்தொகை ரூ.50.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி திரு.K.குமார் ஒப்பந்ததாரரின் ஒப்பந்த காலத்தினை 01.04.2022 முதல் 30.06.2022 வரை நீடிப்பு செய்து பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. இச்செலவினத்தை SUC நிதி மற்றும் பொது நிதியிலில் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.10838/2017/எச்1**

**நகர் மன்ற தீர்மானம் எண்.70 , நாள்.30.03.2022.**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.19**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி சேகரமாகும் குப்பைகளை புற ஆதார முறையில் 100 தூய்மை பணியாளர்களை கொண்டு ஒப்பந்ததாரர் திரு.K.குமார் என்பவர் மூலம் தூய்மை பணியில் ஈடுபடுத்த ஒப்பந்த நீட்டிப்பு செய்து 31.08.2021 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது புற ஆதார முறையில் புதிய நெறிகாட்டு வழிமுறைகளின்படி புதிதாக தேவைப்படும் பணியாளர்களுக்கு பிரேரனை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே நிர்வாக அனுமதி வரப்பெற்று புதிதாக ஒப்பந்தபுள்ளி கோரி பணி உத்தரவு வழங்கி பணியாளர்களை பணியமர்த்தும் வரையில் நகர் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சேகரமாகும் குப்பைளை அப்புறப்படுத்தும் பணி தொய்வில்லாமல் நடைபெறவும் பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி தற்போது பணிபுரிந்து வரும் 100 தூய்மை பணியாளர்களை திரு.K.குமார் ஒப்பந்ததாரர் மூலம் தற்போது பெற்று வரும் நாளொன்றுக்கு நபரொன்றுக்கு ரூ.517.70/- என்ற ஊதிய விகிதத்தில் ஏற்கனவே வழங்கியுள்ள பணி உத்தரவில் காணும் நிபந்தனைகளுடன் இம்மூன்று மாத காலத்திற்குள்ளாக நிர்வாக அனுமதி வரப்பெற்று புதிய ஒப்பந்ததாரர் தேர்வு செய்யப்பட்டால் இந்த ஒப்பந்த நீட்டிப்பு எவ்வித அறிவிப்புமின்றி முடிவடையும் என்ற நிபந்தனைகளுக்கு உட்படுத்தி 01.04.2022 முதல் 30.06.2022 வரை மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்தத்தினை நீடிப்பு செய்து பணி உத்தரவு வழங்கவும் அதற்காகும் செலவினத்தொகை ரூ.48.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி திரு.K.குமார் ஒப்பந்ததாரரின் ஒப்பந்த காலத்தினை 01.04.2022 முதல் 30.06.2022 வரை நீடிப்பு செய்து பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. இச்செலவினத்தை SUC நிதி மற்றும் பொது நிதியிலில் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.10838/2017/எச்1**

**நகர் மன்ற தீர்மானம் எண்.71 , நாள்.30.03.2022.**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.20**

திருச்செங்கோடு நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் டெங்கு, சிக்குன்குன்யா போன்ற நோய் பரவலை தடுக்க புற ஆதார முறையில் தேவைப்படும் 140 DBC பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் மேற்காணும் பணியில் ஈடுபடுத்த ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் அலைபேசி வழி அறிவுறுத்தலின் படி அரசின் புதிய வழிகாட்டுதல் நெறிமுறைகளின் படி ஒப்பந்தபுள்ளி கோரி பணியாளர்களை பணியமர்த்தும் வரையில் புற ஆதார முறையில் ஒப்பந்தபுள்ளி கோரும் பணி 30.07.2021 –ல் மறு உத்தரவு வரும் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோவிட் – 19 மற்றும் டெங்கு தடுப்பு பணிகள் தேக்கமின்றி நடைபெறவும் பொதுசுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதியும் ஏற்கனவே இந்நகராட்சியில் தற்காலிகமாக பணிபுரிந்து வரும் 93 DBC பணியாளர்களை சமுதாய அமைப்பாளர் பரிந்துரை செய்த ஜே.ஜே. மகளிர் சங்கம் மூலம் 01.03.2022 முதல் 31.03.2022 வரை 1 மாதம் பணி புரிய 01.09.2021 அன்று பணி உத்தரவு

வழங்கப்பட்டது. தற்போது 31.03.2022 –ம் தேதியுடன் மேற்காணும் பணி உத்தரவின் கால அளவு முடிவடைய உள்ளதால் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு, சிக்குன்குன்யா மற்றும் கோவிட் – 19 போன்ற நோய்கள் பரவலை தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகள் தொய்வின்றி மேற்கொள்ள பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதி ஏற்கனவே சமுதாய அமைப்பாளர்களால் பரிந்துரை செய்யப்பட்டு DBC பணியாளர்களை மேற்காணும் பணிக்கு ஈடுபடுத்தி வரும் ஜே.ஜே.மகளிர் சங்கத்தினருக்கு 01.04.2022 முதல் 30.06.2022 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு 11.01.2022 –ல் வழங்கிய பணி உத்தரவில் குறிப்பபிட்டுள்ள நிபந்தனைகளுடன் மேலும் அரசின் புதிய வழிகாட்டுதலின் படி புதிதாக ஒப்பந்தபுள்ளி கோரி ஒப்பந்ததாரரை தேர்வு செய்யும் நாள் அன்று இப்பணி உத்தரவு இரத்து செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்கு உட்படுத்தி பணி நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கவும், மேற்காணும் பணிக்கு ஈடுபடுத்தப்படும் பணியாளர்களுக்கு மாவட்ட அரசிதழிலில் வெளியிட்டுள்ளவாறு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.380/– மற்றும் வேலை வழங்குபவர் செலுத்த வேண்டிய EPF 13 % மற்றும் ESI 3.25 % பங்குதொகை சேர்த்து ஆக மொத்தம் 3 மாதத்திற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.40 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் மற்றும் டெங்கு, கோவிட் –19 தடுப்பு முக்கியத்துவம் கருதி 01.04.2022 முதல் 30.06.2022 வரை பணி நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண். 3289/2021/எச்1</u>**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.72 , நாள்.30.03.2022.</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.21**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.27519–23/2021/P2, நாள்.14.03.2022 –இன்படி, திருச்செங்கோடு நகராட்சியில் நமக்கு நாமேத் திட்டம் 2021–22–இன் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் / மதிப்பீடு | நமக்கு நாமே திட்டம் அரசு நிதி ரூ. இலட்சத்தில் | பொதுமக்கள் பங்களிப்புத் தொகை ரூ. இலட்சத்தில் | பங்களிப்பாளர் விவரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.5, கோம்பை நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல். மதிப்பீடு ரூ.11.00 இலட்சம் | ரூ. 7.33 | ரூ.3.67 | ஊர்நலக்கமிட்டி, கோம்பை நகர் |
| 2 | வார்டு எண்.18, அம்மன் குளத்தில் புரனமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல். மதிப்பீடு ரூ.30.00 இலட்சம் | ரூ.20.00 | ரூ.10.00 | விவசாயிகள் சங்கம், திருச்செங்கோடு மற்றும் பெருங்குறிச்சி |
| 3 | வார்டு எண்.13, கூட்டப்பள்ளி பூங்கா சுற்றுவட்டாரப் பகுதியில் CCTV கேமிரா பொறுத்துதல். மதிப்பீடு ரூ.2.00 இலட்சம் | – | ரூ.2.00 | பூங்கா மேற்கு பகுதி பொதுமக்கள் கூட்டப்பள்ளி |
| | மொத்தம் ரூ.43.00 | **ரூ.27.33** | **ரூ.15.67** | |

மேற்கண்டவாறு 3 பணிகளை நமக்கு நாமே திட்டம் 2021–22–ன் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. மன்றத்தில் பதிவு செய்யலாம்.

**<u>கோப்பு எண். 8624/2021/இ1</u>**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.73 , நாள்.30.03.2022.</u>**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.22**

திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தில் உள்ள பொதுப்பிரிவு, கணினி பிரிவு, பொது சுகாதாரப்பிரிவு, பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவில் உள்ள கீழ்கண்ட Xerox M/c க்கு 2022–23 –ம் ஆண்டு முழுவதும் தேவைப்படும் Tonner வாங்கவும், AMC கட்டணம் மற்றும் பழுதுகள் ஏற்பட்டால் சரிசெய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கோரப்படுகிறது.

| வ எண் | பிரிவு | Xerox M/c Model/ Name |
|---|---|---|
| 1 | கணினி பிரிவு | Canon Xerox M/c Image Runner 4225 (IR 4225) |
| 2 | பொதுப்பிரிவு | Canon Xerox M/c Image Runner 2006N (IR 2006N) |
| 3 | பொது சுகாதாரபிரிவு | Canon Xerox M/c Image Runner 2006N (IR 2006N) |
| 4 | பொறியியல் மற்றம் குடிநீர் பிரிவு | Canon Xerox M/c Image Runner 2004N (IR 2004N) |

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளை Canon, Xerox M/c company அங்கீகாரம் பெற்ற நிறுவனமான "M/s COMTECHK,SALEM மற்றும் M/S WISDOM INFOTECHK,SALEM" நிறுவனம் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.1961 /2022/இ1**

**நகர் மன்ற தீர்மானம் எண்.74 , நாள்.30.03.2022.**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.23**

திருச்செங்கோடு நகராட்சியில் 2022–23–ம் ஆண்டு மேற்கொள்ளப்படும் திட்ட பணிகளை அரசாணை எண்.243, நாள்.21.10.2017, நிதி ( ஊதியம்) துறை –இல் தெரிவித்துள்ள வரன்முறையின்படி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அறிவுரைகளின் படி நகராட்சி சாதனைகளை நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் கீழ்கண்டவாறு செலவினம் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வருவாய் நிதி | – | ரூ.15.00 இலட்சம் |
| குடிநீர் நிதி | – | ரூ.5.00 இலட்சம் |
| கல்வி நிதி | – | ரூ.2.00 இலட்சம் |

எனவே மேற்கண்டவாறு நாளிதழ்களில் விளம்பரம் செய்ய 2022– 23–ம் நிதி ஆண்டிற்கு ஆகும் செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 2044/2022/இ1**

**நகர் மன்ற தீர்மானம் எண்.75 , நாள்.30.03.2022.**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.24**

கீழ்க்கண்ட பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.19089/2021/இ2, நாள்.19.11.2021–இல் மூலதன மானிய நிதி (Capital Grant Fund - CGF) 2021-22-ன் கீழ் ரூ.259.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும் மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.686/2021/DO1–ன்படி தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டுள்ளது. அதன்படி 12.01.2022 அன்று நடைப்பெற்ற முதலாம் அழைப்பு ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்து கொள்ளாததால் 24.02.2022 அன்று நடைப்பெற்ற இரண்டாம் அழைப்பு ஒப்பந்தப்புள்ளியில், Online–ல் எவ்வித ஒப்பந்தப்புள்ளியும் பெறப்படவில்லை, Offline –ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. மேலும், வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூராய்வு செய்யப்பட்டு 08.03.2022 அன்று Price Bid திறக்கப்பட்டது. அதன்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :-

| வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி யின் படி கொடுத்துள்ள | விலைகுறைப்பு கேட்பு கடிதத்திற்கு பின் |
|---|---|---|---|---|

| | | | விலை விகிதம் % | குறைக்கப்பட்ட விலை விகிதம் |
|---|---|---|---|---|
| திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட ராஜகவுண்டம்பாளையம் ஏரி (வார்டு – இ பிளாக் -8 நகரளவை எண்.121) மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ. 259.00 இலட்சம் | 1.Thiru.D.Anandaraj, Tiruvallur | (+)4.95 % அதிகம் | (+)4.80 % அதிகம் |
| | | 2.M/s.ESP & Co, Chennai | (+)7.50 % அதிகம் | |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள Thiru.D.Anandaraj, Tiruvallur ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு கடிதம் கோரப்பட்டத்தில் தனது ஒப்பந்தப்புள்ளி விலையான மதிப்பீட்டை விட (+)4.95% கொடுத்துள்ளதில் இருந்து 0.15% விலைக்குறைப்பு செய்து இறுதியாக மதிப்பீட்டை விட (+)4.80% அதிகம் கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (+)4.80% கூடுதலாக கொடுத்துள்ள Thiru.D.Anandaraj, Tiruvallur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மேற்கண்ட பணியின் மதிப்பீட்டிற்கான செலவினத்தை மூலதன மானிய நிதி (Capital Grant Fund - CGF) 2021-22-ன் கீழ் ஒதுக்கப்படும் நிதிலிருந்தும், கூடுதல் செலவினமான (+)4.80%-னை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 7937/2021/இ1 – 3**

**நகர் மன்ற தீர்மானம் எண்.76 , நாள்.30.03.2022.**

மதிப்பீட்டை விட (+)4.80% கூடுதலாக கொடுத்துள்ள Thiru.D.Anandaraj, Tiruvallur அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.25**

திருச்செங்கோடு நகராட்சி பகுதிகளில் புதிய குடிநீர் இணைப்பு வழங்க சாலை பராமரிப்பு கட்டணம் மற்றும் மேற்பார்வை கட்டணம் ஆகியவற்றை விண்ணப்பதாரிடம் பெறுவதற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.748/2008/குவ2, நாள்.21.09.2009 சுற்றறிக்கையின்படி 2022–2023–ஆம் ஆண்டிற்கு கீழ்கண்டுள்ளவாறு 5% உயர்த்திய, புதிய குடிநீர் இணைப்புகளுக்கு சாலை பராமரிப்பு கட்டணம் மற்றும் மேற்பார்வை கட்டணம் ஆகியவற்றை 01.04.2022 முதல் நிர்ணயித்து கணினியில் பதிவேற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| சாலை நீளம் | தார் சாலை | | சிமெண்ட் சாலை | | கருங்கல் ஜல்லி சாலை | |
|---|---|---|---|---|---|---|
| | மேற்பார்வை கட்டணம் | சாலை சீரமைப்பு கட்டணம் | மேற்பார்வை கட்டணம் | சாலை சீரமைப்பு கட்டணம் | மேற்பார்வை கட்டணம் | சாலை சீரமைப்பு கட்டணம் |
| 0–30மீ | ரூ.355/– | ரூ.4360/– | ரூ.355/– | ரூ.4985/– | ரூ.355/– | ரூ.2170/– |
| 30–90மீ | ரூ.470/– | ரூ.5510/– | ரூ.470/– | ரூ.6075/– | ரூ.470/– | ரூ.3525/– |

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 2147/2020/இ2**

**நகர் மன்ற தீர்மானம் எண்.77 , நாள்.30.03.2022.**

அனுமதிக்கப்பட்டது.

ஒம்/ நளினிசுரேஷ்பாபு,
நகர் மன்ற தலைவர்,
திருச்செங்கோடு நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
திருச்செங்கோடு நகராட்சி.